

தலைமைச் செயலகத்தில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (20.07.2023) சென்னை குடிநீர் வாரியம் மற்றும் ஒடிசா மாநில நீர்க் கழகம் (Water Corporation of Odhisa (WATCO) இடையே பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கோடம்பாக்கம் மற்றும்அடையாறு மண்டலங்களில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிகழ்ச்சியில், முனைவர் தா.கார்த்திகேயன், (அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,) இரா.கிர்லோஷ் குமார், (சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர்,) ஜி.மதிவதனன், ( அரசு முதன்மை செயலாளர், ஒடிசா மாநில வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை/ தலைவர், ஒடிசா மாநில நீர்க் கழகம்,) பிரதீப்தா குமார் ஸ்வைன், (மேலாண்மை இயக்குநர், ஒடிசா மாநில நீர்க் கழகம்,) வீ.கு.இராமசாமி, பொறியியல் இயக்குநர், சென்னை குடிநீர் வாரியம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் - 'நான் முதல்வன்' திட்டம் குறித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாணவர்களுடன் கலந்துரையாடல்!

## திறன் பயிற்சி சான்றிதழ்களை வழங்கினார்!

கள்ளக்குறிச்சி, ஜூலை 22 - கள்ளக்குறிச்சி மாவட்டம் நீலமங்கலம் ஏ.கே.டி பள்ளி கூட்டரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நான் முதல்வன் திட்டம் குறித்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுடன், பொதுப்பணித்துறை (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள், சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, பிராப்பு திட்ட அமலாக்கத்துறை செயலாளர் மரு. தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவன் குமார் ஆகியோர் முன்னிலையில் (19.07.2023 அன்று) கலந்துரையாடினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இரண்டு கண்களாக பார்ப்பது, சுகாதாரம் மற்றும் பள்ளி கல்வித்துறையை தான். பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்காக நான் முதல்வன் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு மாணவரும் தனது துறையில் முதல்வனாக திகழ வேண்டுமென்பதே நான் முதல்வன் திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் கீழ் 14 லட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் பயிற்சி பெற்ற கலை அறிவியல் கல்லூரியை சேர்ந்த 1.425 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் வருங்காலத்தில் தொழில் முனைவோராகவும், தொழில் வல்லுனராகவும் உருவாகிட இத்திட்டம் உறுதுணையாக இருக்கும்.

மாணவர்களின் தனித்திறமையை வெளிக்கொண்டு வந்து, வேலையில்லாத நிலையை மாற்றிடவே நான் முதல்வன் திட்டம் கொண்டுவரப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்பு கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்திற்கென கல்லூரி ஒன்றிற்கு ரூ.70 லட்சம் வீதம் ரூ.21 கோடியே 70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைவினை பொருட்கள் செய்யும் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ.5 கோடி செலவில் கைவினை பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி மையம் அமைக்கப் பட உள்ளது.

மாணவர்களின் கற்றலை அதிகரிக்க விளையாட்டு முறை கற்றலை ஊக்குவிக்கும் வகையில் ரூ.1 கோடி செலவில் 1,000 பள்ளிகளில் விளையாட்டு முறை கற்றல் செயல்படுத்தப்படவுள்ளது. தமிழ்நாடு திறன் பயிற்சி மையங்களில் பயில்பவர்களுக்கு பயிற்சியோடு நின்றுவிடாமல் பல்வேறு திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு நான்சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. மாணவர்கள் பாடங்களை படித்து, மதிப்பெண் பெறுவதோடு செயல்படுத்தப்படுகிறது.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் ஆர்டிபிஷியல் இன்டலிஜன்ஸ், மிஷன் லேர்னிங் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை திறன் பயிற்சியில் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரின் தனித்திறமையை கண்டறிந்து அதனை ஊக்கப்படுத்துவதே நான் முதல்வன் திட்டத்தின் தனிச்சிறப்பு.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் திறன் பயிற்சிகளை வழங்க அந்தந்த கல்லூரி பேராசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கென பேராசிரியர்களுக்கு தனி பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இதுபோன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

அரசு திட்டங்களின் வெற்றி என்பது அதனால் அடையும் பயனை பொருத்து அமையும். நான் முதல்வன் திட்டத்தினை மாணவர்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கான திறன் பயிற்சி, வேலைவாய்ப்புகள் மற்றும் நான் முதல்வன் திட்டம் குறித்து கலந்துரையாடினார்.

தொடர்ந்து, சின்னசேலம் இலங்கை அகதிகள் முகாமில் உள்ள 10 மாணவர்களுக்கு திறன் பயிற்சிக்கான சான்றிதழை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ந.மோகன்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் நா.சத்தியநாராயணன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம். க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், அனைத்து துறை அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ - மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

# 38 கட்சிகளுடன் பா.ஜ.க. கூட்டணி ஏன்?

## பெரிய கூட்டணிக் கட்சிகள் பிரிந்ததால் 50 முதல் 75 சீட் குறைகிறது!

சென்னை, ஜூலை 22- பெரிய கட்சிகள் கூட்டணியில் இருந்து பிரிந்து சென்றதாலும், கர்நாடகா போன்ற மாநிலங்களில் பா.ஜ.க. தோல்வியை தழுவியதாலும் 50 சீட்டுகள் முதல் 75 சீட்டுகள் வரை மக்களவையில் பா.ஜ.க.வுக்கு தற்போதைய நிலையிலேயே இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், தேர்தலில் சிறிய கட்சிகளையும் இணைத்து தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ள பா.ஜ.க. அக்கட்சிகளின் கோரிக்கையையும் நிறைவேற்றத் தொடங்கிவிட்டது. இதனால் குறைந்த ஓட்டுக்களில் தோற்ற 130 தொகுதிகளில் வெற்றி பெற வாய்ப்பு உள்ளதா என்று ஆராய்ந்து வேலைகளைத் தொடங்கியிருப்பதும் தெரியவந்துள்ளது.

பா.ஜ.க. கூட்டணியில் இருந்து பீகார் மாநில கூட்டணிக் கட்சியான ஐக்கிய ஜனதா தளம் வெளியேறியது. மேலும் காங்கிரஸ், லல்லு பிரசாத்தின் கட்சியுடன் கூட்டணி சேர்ந்து ஆட்சியை அமைத்தது. இந்த தேர்தலில் அனைத்து எதிர்க்கட்சிகளையும் பா.ஜ.க.வுக்கு எதிராக ஒன்றிணைக்கத் தொடங்கி விட்டார் நிதீஷ்குமார். பீகாரில் பா.ஜ.க. கூட்டணி 40 தொகுதிகளில் 39 தொகுதிகளை கைப்பற்றியிருந்தது. அதில் ஐக்கிய ஜனதா தளம் 16 தொகுதிகளில் வென்றிருந்தது. பா.ஜ.க. 17 தொகுதிகளில் வென்றது. இதற்போது ஐக்கிய ஜனதா தளம் வெளியேறி விட்டது. இதனால் தற்போதைய நிலையிலேயே 16 தொகுதிகள் இழப்பு ஏற்பட்டுள்ளது.

மகராஷ்டிராவில் கடந்த முறை சிவசேனா கட்சியுடன் கூட்டணி அமைத்தது. அதில் 48 தொகுதிகளில் பா.ஜ.க. மட்டும் 23 தொகுதிகளை கைப்பற்றியது. சிவசேனா 18 இடங்களில் வென்றது. தற்போது பா.ஜ.க. தனித்து விடப்பட்டதால் சிவசேனா, சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சியை உடைத்து மாநிலத்தில் ஆட்சியைப் பிடித்துள்ளது. ஆனாலும் மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற முடியுமா என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. மேலும் மேற்கு வங்கத்தில் இதுவரை இல்லாத அளவாக கம்யூனிஸ்ட், காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தேர்தலுக்கு முன்னரே ஒன்று சேர்ந்து விட்டன.

அங்கு மொத்தம் 42 தொகுதிகள் உள்ளன. 3 கட்சிகள் கூட்டணி சேர்ந்தால் அங்கு பா.ஜ.க. சீட் பெறுவது கடினம். அங்கு மட்டும் கடந்த தேர்தலில் 18 தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெற்றிருந்தது. மேலும் கர்நாடகாவில் மொத்தம் உள்ள 28 தொகுதிகளில் 25 தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெற்றிருந்தது. காங்கிரஸ் ஒரு தொகுதியில் மட்டுமே வென்றிருந்தது. ஆனால் தற்போது நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. படுதோல்வி அடைந்துள்ளது. இதனால் அங்கு இந்த முறை மக்களவைத் தேர்தலில் வெற்றி பெறுவது கடினம் என்று தெரியவந்துள்ளது.

அதேநேரத்தில் மத்தியப் பிரதேசத்தில் மொத்தம் உள்ள 29 தொகுதிகளில் பா.ஜ.க. 28 தொகுதிகளில் வென்றுள்ளது. ஆனால் அங்கு தற்போது பா.ஜ.க.வுக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது. காங்கிரஸ் ஆட்சியை கவிழ்த்து, எம்.எல்.ஏ.க்களை இழுத்து ஆட்சியமைத்துள்ளது. இதனால் இந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு பின்னடைவு ஏற்படும் என்று தெரியவந்துள்ளது. இதனால் இந்த முக்கியமான 5 பெரிய மாநிலங்களில் பா.ஜ.க.வுக்கு பெரும் பின்னடைவு ஏற்படும். குறிப்பாக 50 முதல் 75 சீட்டுகள் வரை குறையும் என்று கூறப்படுகிறது.

இதனால் நாடு முழுவதும் உள்ள 130 தோல்வியுற்ற தொகுதிகளைக் குறி வைத்து அங்கு வெற்றி பெறுவதற்கான கணக்குகளை பா.ஜ.க. வகுத்து வருகிறது. இதற்காகத்தான் அது. சிறிய கட்சிகளையும் கூட்டணியில் சேர்த்துள்ளது. பீகாரில் பாஸ்வான் கட்சியை அவரது மறைவுக்குப் பிறகு பா.ஜ.க. உடைத்தது. அவரது தம்பியை தனியாகப் பிரித்து தனிக்கட்சி தொடங்க வைத்தது. அவருக்கு ஒன்றிய அமைச்சரவையிலும் இடம் வழங்கியது. தற்போது பீகாரில் தோல்வி பயம் ஏற்பட்டதும், பாஸ்வானின் மகன் சிராக் பாஸ்வானையும் கூட்டணியில் சேர்த்துள்ளது.

தமிழ்நாட்டில் செல்வாக்கு இல்லாமல் உள்ள அ.தி.மு.க.வை கூட்டணியில் சேர்த்ததோடு, அக்கட்சி சொல்படி எல்லாம் நடக்கத் தொடங்கியுள்ளது. இதற்குக் காரணம் பா.ஜ.க. இந்த தேர்தலில் வெற்றி பெறவில்லை என்றால், எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றால் பா.ஜ.க.வுக்கு பெரிய நெருக்கடி ஏற்படும். பா.ஜ.க. கட்சிக்குள்ளேயே மோடி, அமித்ஷாவுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். புதிய ஆட்களை தயார் படுத்தும் நிலை உருவாகிவிடும் என்று மோடியும், அமித்ஷாவும் பயப்படுகின்றனர். இதனால்தான், பா.ஜ.க. பல விவகாரங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வதோடு எதிர்க்கட்சிகளையும் பழி வாங்கத் தொடங்கிவிட்டது. குறிப்பாக அமலாக்கப்பிரிவு, சிபிஐ, வருமான வரித்துறை மூலம் நெருக்கடி கொடுத்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டத் தொடங்கி விட்டன. இது அரசியல் அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

37 கட்சிகள்; 28 எம்பிக்கள் பா.ஜ.க. நேற்று முன்தினம் நடத்திய கூட்டணி கட்சிகள் கூட்டத்தில் 38 கட்சிகள் பங்கேற்றதாக அறிவிக்கப்பட்டது. பா.ஜ.க.வைத் தவிர 37 கட்சிகள் கலந்து கொண்டன. இந்த 37 கட்சிகளுக்கும் சேர்ந்து 27 எம்.பி.க்கள் மட்டுமே உள்ளனர். அதிலும் சிவசேனாவை உடைத்தது மூலம் அந்தக் கட்சிக்கு 12 எம்.பி.க்கள், பாஸ்வானின் கட்சியை உடைத்ததால் அவரது தம்பியின் கட்சியான ராஷ்டிரிய லோக் ஜனசக்திக்கு 5 எம்பிக்கள், மகராஷ்டிராவில் தேசியவாத காங்கிரசை உடைத்ததன் மூலம் கிடைத்த 2 எம்பிக்கள், அப்னாதளம் கட்சிக்கு 2, அதைத் தவிர மேகாலயாவில் உள்ள தேசிய மக்கள் கட்சி, நாகாலாந்தில் உள்ள தேசிய ஜனநாயக முற்போக்கு கட்சி, நாகா மக்கள் முன்னணி, ஜார்கண்டில் உள்ள ஏஜெஎஸ்யு, சிக்கிமில் உள்ள சிக்கிம் கிராந்திக்ரி மோர்ச்சா, மிசோராமைச் சேர்ந்த மிசோ தேசிய முன்னணி ஆகிய 6 கட்சிகளுக்கு தலா ஒரு எம்பிக்கள் உள்ளனர்.

அ.தி.மு.க. உள்ளிட்ட 27 கட்சிகளுக்கு ஒரு எம்பிக்கள் கூட மக்களவையில் இல்லை. கடந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. மட்டும் 303 இடங்களை வென்றது. தற்போது கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு என்று 27 எம்பிக்கள் உள்ளனர். இந்த 27 எம்பிக்களும் பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்ததால், கடந்த தேர்தலில் ஏற்பட்ட மோடி அலையால் வெற்றி பெற்றவர்கள். ஆனால் தற்போது மோடி அலை எதுவும் இல்லை. ஒன்றிய அரசுக்கான எதிர்ப்பு அலைதான் தற்போது உருவாகியுள்ளது. அதேபோல, பீகார், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் பெரிய கட்சிகள் கூட்டணியை விட்டு வெளியேறி விட்டன.

கர்நாடகாவில் பெரிய தோல்வி. மத்தியப் பிரதேசத்தில் தற்போது கடும் எதிர்ப்பு அலை உருவாகியுள்ளது. இதனால் பா.ஜ.க.கவுக்கு இருக்கும் நம்பிக்கையான மாநிலங்களாக உத்திரப்பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்கள் மட்டுமே உள்ளன. இதனால் மெஜாரிட்டிக்குத் தேவையான 274 சீட்டுகளை பா.ஜ.க.வால் வெல்ல முடியுமா என்ற சந்தேகம் பா.ஜ.க.வுக்கே ஏற்பட்டுள்ளது. ஒரு வேளை 250 சீட்டுகள் வாங்கினால் கூட தற்போதைய கூட்டணியால் 27 சீட்டுகளைப் பெற்று கூட்டணியால் மெஜாரிட்டி பெற முடியுமா என பல சந்தேகங்கள் எழுந்துள்ளதால், பா.ஜ.க. தலைவர்கள் மட்டுமல்ல தொண்டர்களும் கடும் பீதியடைந்துள்ளனர்.

எந்தக் கூட்டணியிலும் இடம் பெறாத 11 கட்சிகளுக்கு 91 எம்.பி.க்கள்

பா.ஜ.க., காங்கிரஸ் ஆகிய இரு கூட்டணியிலும் சேராத 11 கட்சிகள் உள்ளன. இந்தக் கட்சிகளுக்கு மக்களவையில் 91 எம்.பி.க்கள் உள்ளனர். இதனால் இவர்களுக்கு கடும் டிமாண்ட் ஏற்பட்டுள்ளது. ஆந்திராவின் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ், ஒடிசாவின் பிஜு ஜனதா தளம்(பிஜேடி), தெலங்கானாவின் பாரத் ராஷ்டிர சமிதி (பி.ஆர்.எஸ்.), பகுஜன் சமாஜ் கட்சி, அகில இந்திய மஜ்லிஸ் கட்சி, தெலுங்கு தேசம், சிரோன் மணி அகாலிதளம், அகில இந்திய ஐக்கிய ஜனநாயக முன்னணி(ஏஐயுடிஎப்), ஜனதாதளம்(மதசார்பற்றது), ராஷ்டிரிய லோக்தந்திரிக் கட்சி மற்றும் சிரோன்மணி அகாலி தளம்(மான்) ஆகிய கட்சிகள் எந்தக் கூட்டணியிலும் இடம் பெறவில்லை.

ஆந்திராவில் ஆளும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி, ஒடிசாவின் ஆளும் பி.ஜே.டி. கட்சி நாடாளுமன்றத்தில் நடக்கும் வாக்கெடுப்பின் போது பா.ஜ.க.வுக்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளன. ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ், பி.ஜே.டி, பி.ஆர்.எஸ். கட்சிகள் ஆளும் 3 மாநிலங்களில் மொத்தம் 63 எம்.பி.க்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

தற்போதைக்கு நடுநிலையில் இருக்கும் இந்த கட்சிகளை தங்கள் பக்கம் இழுக்க 2 அணிகளும் முயன்று வருகின்றன. எது எப்படி இருப்பினும் இந்தக் கட்சிகள் தேர்தலுக்கு பின் எடுக்கும் முடிவுகள் தேசிய அரசியலில் திருப்பத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

மாநிலம் முழுவதும்

# இதுவரை ரூ.4,800 கோடி மதிப்புள்ள கோயில் நிலம் மீட்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, ஜூலை 22- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துகளை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அதன்படி நேற்று முன்தினம் தென்காசி மாவட்டம், பண்பொழி, திருமலை குமாரசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.7.50 கோடி மதிப்பீட்டிலான நன்செய் நிலம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம், பண்பொழி, திருமலை குமாரசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமாக புளியரை கிராமத்தில் 143.24 ஏக்கர் நன்செய் நிலம் புளியரை கூட்டுறவு பண்ணை சங்கத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது.

இந்த நிலத்திற்கு புளியரை கூட்டுறவு சங்கத்தினர் சுமார் 3 கோடி ரூபாய் குத்தகை பாக்கி வைத்திருந்ததால், 2018-ஆம் ஆண்டு வருவாய் நீதிமன்றத்தில் உரிய கால அவகாசம் வழங்கி நிறைவேற்றப்பட்ட உத்தரவுப்படி நிலுவைத் தொகையினை செலுத்தாததால், வருவாய் நீதிமன்ற உத்தரவுப்படி இன்று தூத்துக்குடி இணை ஆணையர் எம்.அன்புமணி முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய் துறை அலுவலர்களின் உதவியுடன் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த நன்செய் நிலம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.7.50 கோடியாகும். இந்நிகழ்வின்போது திருக்கோயில் உதவி ஆணையர் திருமதி கே. கோமதி மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

புதிய அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை ரூ.4,803.38 கோடி மதிப்பீட்டிலான 5,292.17 ஏக்கர் நிலங்களும், 1,279 கிரவுண்ட் மனை மற்றும் கட்டிடங்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து ளர்க மீட்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் கொடூரம்! நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதி மறுப்பு!

# எதிர்க்கட்சிகள் தொடர் முழக்கம்! இரு அவைகளும் நாள் முழுதும் ஒத்திவைப்பு!

புதுடெல்லி, ஜூலை 22- மணிப்பூர் கொடூரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் தொடர் முழக்கம் எழுப்பியதால், இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. மணிப்பூர் கலவரம் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என இரு அவைகளிலும் காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் நோட்டீஸ் அளித்திருந்தன.

மக்களவையில் மணிப்பூர் விவகாரத்தை தி.மு.க. தரப்பில், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எழுப்பினார். பிரதமர் மோடி நாடாளுமன்றத்துக்கு வந்து பதிலளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

காங்கிரஸ் உள்ளிட்ட மற்ற கட்சிகளும் இதே கோரிக்கையை வலியுறுத்தின. ஆனால் அனுமதி மறுக்கப்பட்டதால் கடும் அமளி ஏற்பட்டு நாடாளுமன்றம் மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் 2 மணிக்கு அவை கூடிய போதும் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகளின் கோரிக்கை மறுக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட முழக்கம் காரணமாக மக்களவை நாளை வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதேபோல், மாநிலங்களவையில் மணிப்பூர் விவகாரம் குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பினர். மணிப்பூர் கொடூரம் குறித்து குறுகிய நேர விவாதம் நடத்தப்படும் என்ற மாநிலங்களவைத் தலைவர் அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. பிரதமர் மோடி, அவைக்கு வந்து விளக்கம் அளிக்க வலியுறுத்தின.

அப்போது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே, மணிப்பூர் பற்றி எரிவதாகத் தெரிவித்தார். பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்படுவதாகவும், பெண்களுக்கு எதிரான கொடூரம் அரங்கேறியுள்ளதாகவும் குற்றம் சாட்டிய கார்கே, பிரதமர் அமைதியாக இருக்கிறார் என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

மணிப்பூர் கொடூரம் குறித்து விவாதிக்க நோட்டீஸ் கொடுத்தும், அனுமதி மறுப்பதை ஏற்க முடியாது என்றும் கார்கே தெரிவித்தார். இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்ட, மாநிலங்களவை பின்னர் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

# ரூ.1.90 கோடியில் மயிலாடுதுறை மாவட்டத்தில் 5 புதிய கட்டடங்கள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

நாகை. ஜூலை 22- மயிலாடுதுறை மாவட்டத்தில் மணல்மேடு, திருமங்கலம், பொறையார், மேல மங்கநல்லூர் ஆகிய இடங்களில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் தலா ரூ.38 லட்சம் செலவில் கட்டுப்பட்டுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டிடம் திறப்பு விழா மற்றும் மேல மங்கநல்லூரியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர் மாவட்ட ஊராட்சி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 38லட்சம் மதிப்பில் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறை கட்டடம் திறப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிகளுக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமைதாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் முன்னிலை வகித்தார்.

புதிய கட்டிடங்களை சுற்றுச்சூழல் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சிகளில் மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் சி.சத்தியசீலன், எம்.எம். சித்திக், மாநில விவசாயத்தொழிலாளர் அணி துணை செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, முத்து மகேந்திரன், இராம.இளங்கோவன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பி.எம். அன்பழகன், அமிர்த.விஜயகுமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், என்.இளையபெருமாள், ஞான.இமையநாதன், ப.முருகமணி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஊராட்சி ஒன்றியம் மங்கநல்லூர் ஊராட்சி மேலமங்கநல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ரூ. 38 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மேல் தளத்துடன் 4 வகுப்பறை கட்டிடத்தை சுற்றுச்சூழல் மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் திறந்து வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக்கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றியச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா ஆகியோர் உள்ளனர்.



விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவ அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா. இலட்சுமணன் விழுப்புரம் தொகுதி, கோலியனூர் தெற்கு ஒன்றியம், சேந்தனூர் முருகையனின் வீடு எரிந்ததை அறிந்து நேரில் சென்று அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் நிதி உதவி அளித்து அவரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் தே.முருகவேல், இரா.கேசவன், வேல்முருகன், குப்புசாமி, தேவ கிருஷ்ணன், பாலாஜி, கலியமூர்த்தி, சுதா பாபுஜி, கிராம நிர்வாக அலுவலர், கிளைச்செயலாளர்கள் பாபுஜி, சக்திவேல், அரசமங்கலம் வெங்கடேசன், உதய சூரியன், ராமசாமி, ராஜமாணிக்கம், பிரபாகரன், கிரி மற்றும் பலர் உடன் உள்ளனர்.